TAMIL

# கற்பித்தலுக்கான முதன்மைத் தத்துவங்கள்:

## கற்பித்தல் விடய வழிகாட்டி



பாடசாலை மற்றும் பயிற்சிநிறுவனங்கள் கொண்டிருக்க வேண்டியவை:

✷ மாணவர்கள் மற்றும் தொழில்பயிலுனர்/பயிலுனர் தனிப்பட்டமுறையிலும் அத்தோடு மற்றவர்களுடான கூட்டுழைப்பின் மூலம் தம்மைவிருத்தி செய்வதற்கு சமவாய்ப்புக்களை வழங்குதல்.

✷ மாணவர்கள் மற்றும் தொழில்பயிலுனர்/பயிலுனரின் பயிலும் ஆர்வம், தாக்குப்பிடிக்கும் திறன் மற்றும் அறிவார்வத்தை ஊக்குவித்தல்.

✷ மாணவர்கள் மற்றும் தொழில்பயிலுனர்/பயிலுனரின் சுயகற்றலுக்கான உத்திகளையும் அத்தோடு மாறுநிலைச்சிந்தனை இயல்பையும் ஊக்குவித்தல்.

✷ நீதிநெறி, சமூக மற்றும் பண்பாட்டுத்திறன், அத்தோடு ஜனநாயகஅறிவு மற்றும் ஜனநாயகப்பங்கீடு என்பவற்றை விருத்தி செய்வதன் மூலம், மாணவர்கள் மற்றும் தொழில்பயிலுனர்/பயிலுனரின் பிரத்தியேகவிருத்தி மற்றும் அடையாளம் என்பவற்றை ஊக்குவித்தல்.

✷ விழிப்புணர்வுடன் நுணுக்கமான மதிப்புத்தேர்வுகளையும் கல்வி அத்தோடு எதிர்கால பதவியையும் மாணவர்கள் மற்றும் தொழில்பயிலுனர்/பயிலுனர் தெரிவு செய்வதற்கும் இவர்கள் தீர்மானங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் வழிவகுத்தல்.

✷ வேறுபட்ட வேலை வழிமுறைகளையும் அத்தோடு பொருத்தமான பயிற்சி முறைகளையும் ஊக்குவித்தல்

✷ தனிப்பட்ட ஒவ்வொரு ஆசிரியரின் தகைமைகளை ஊக்குவித்து, உபயோகித்து அவற்றை மேம்படுத்தல்.

✷ ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுனர்கள் ஓர் தெளிவான தலைவர்களாகவும் அத்தோடு சிறார் மற்றும் இளம்பராயத்தினருக்கு சிறந்த முன்மாதிரிகளாகவும் அமைவதற்கு உதவுதல்.

✷ உடல் மற்றும் உளரீதியிலான வேலை மற்றும் கல்விப்பயிற்சிச்சூழல் ஆரோக்கியம், குதூகலம் மற்றும் அறிவு என்பவற்றை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

✷ பாடசாலையுடன் பெற்றோர்/பாதுகாவலர் ஆகியோரின் கூட்டுப்பொறுப்பை உறுதிப்படுத்தல் அத்தோடு குடும்பத்துடன் சேர்ந்து இயங்கும் வகையில் ஏற்பாடுகளுக்கு வழிவகுத்தல்.

✷ உள்ளூர் சமூகமும் இப்பயிற்சியில் பயனுள்ள வகையில் ஈடுபட வழிவகுத்தல்.

கற்பித்தலுக்கான முதன்மைத் தத்துவங்களின் முழுமையான வடிவத்தை கண்டு கொள்வதற்கு
**http://www.udir.no/Upload/larerplaner/Fastsatte_lareplaner_for_Kunnskapsloeftet/prinsipper_lk06.pdf?epslanguage=no**

கல்வித்திணைக்களத்தில் 2006 இல் வெளியிடப்பட்ட Kunnskapsløftet திட்டத்திற்கென இந்த வழிகாட்டல் தயாரிக்கப்பட்டது. கல்வியூட்டலில் இந்த கோட்பாடுகளை காக்கும் வண்ணம் பாடசாலையைக் கேட்டுக் கொள்வதற்கு கூட்டங்களுக்குச் செல்லும் போது பெற்றோராகிய நீங்கள் இதை எடுத்துச் செல்லலாம்.

FORELDREUTVALGET
FOR GRUNNOPPLÆRINGEN